ஐக்கியக்குரல் | FEBRUARY 2022

# மீண்டெழவே முடியாத நிலையில் பொருளாதாரம்!




**சத்திரியன்**

"சின்னப்பிள்ளைக்கு விளையாட்டு சுட்டெலிக்கு சீவன் போகுது" என்ற நிலையில் நாட்டு மக்கள் சிக்கித் தவிக்கின்ற கொடூர நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது இலங்கையில் மட்டுமல்ல அயல்நாடான இந்தியா, அதற்குப் பக்கத்திலுள்ள நாடு (சீனா), பர்மா, ஜப்பான், பாகிஸ்தான், பங்ளாதேஷ், மத்திய கிழக்கு நாடுகள், நைஜீரியா மற்றும் அமெரிக்க வரைக்கும் இலங்கையின் வண்டவாளம் தண்டவாளம் ஏறிவிட்டது.

உலக நாடுகளை அச்சுறுத்திய கொரோனா தாக்கம் உலக நாடுகளின் பொருளாதாரத்தில் ஒரு ஆட்டம் காண்பித்துள்ளது. இதில் இலங்கையும் ஒரு துரும்பு மாதிரி தூக்கி வாரி போட்டுவிட்டது. ஆனால் எல்லா நாடுகளும் ஒரளவு சுதாகரித்துக் கொண்டு மீண்டு வந்து கொண்டிருக்கும் நிலையில், இலங்கையோ அதளபாதளத்துக்குள் சென்று கொண்டு இருக்கின்றது என்பதே நிதர்சனம்.

இலங்கையைப் பொருத்த வரையில் பொருளாதாரம் என்பது விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறை, அந்நியச் செலாவணிகளையும் நம்பித்தான் தங்கியுள்ளது. திறந்த பொருளாதார கொள்கை இருந்தால் மட்டும் தான் இலங்கையினால் நிமிர்ந்து நிற்க முடியும். இது காலம் தொட்டே இலங்கை வரலாற்றில் பதிவான முக்கிய விடயம்.

"ஆட்சிக்கு வந்தா அம்மா விலையேறிச்சு சும்மா" என்று தலைப்பிட்ட காலங்களும் பத்திரிகை வரலாற்றில் மறக்கமுடியாத சம்பவங்களே! கேழ்வரகு, சாமி, பொன்னி, குதிரைவால் அரிசி, மரவள்ளிக்கிழங்கு என்று சாப்பிட்டு உயிர்வாழ்ந்த காலங்களும் வடுக்களே. மண்ணெண்ணெய்க்கு வரிசை கட்டிய காலம் என்று சொல்ல முடியாத துயரங்களை அன்றைய மக்கள் நன்றாகவே அனுபவித்துள்ளனர்.

ஸ்ரீமாவோ பண்டார நாயக்க காலத்தில் இவை நடந்தேறியுள்ளது. அன்று நடந்தது பிரதமர் ஆட்சியும் மூடிய பொருளாதார கொள்கையுமே இருந்துள்ளது. இலங்கையைப் பொருத்த வரையில் அன்றைய காலத்தில் விவசாயம் மற்றும் வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதியே முதன்மை பெற்று விளங்கியது என்பதை வரலாற்றுத் துறையினரினால் மறுதலிக்க முடியாத ஒன்று.

வெளிநாட்டு வியாபாரத்தை உள்நுழைய விடாது தடுத்து நிறுத்திய பொருளாதார கொள்கை 1977 ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. ஆட்சி மாறியது மக்களின் துன்பங்கள் சற்றே குறைத் தொடங்கியது. வெளிநாட்டு வியாபாரம், வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு என்று நாடு முன்னேறத் தொடங்கியது.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சி தலைமையிலான இலங்கை தேசிய அரசுப் பேரவை பெரும்பான்மை ஆசனத்துடன் ஆட்சியைக் கைப்பற்றியது. பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான இடதுசாரிக் கூட்டணி அரசு தனது ஆட்சிக் காலத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மக்களிடையே செல்வாக்கை இழந்தது. அதிலும் பெரும் துயரமானது, தமிழ் கட்சிகளை விட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி வரலாற்றில் மிகவும் மோசமான சரிவையே சந்தித்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமைக்கு மாறிய ஆட்சி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஆட்சி அமைய , தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழரசுக் கட்சியின் தலைவர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் தமிழர் விடுதலைக் கூட்டணியை அமைத்து எதிர்க்கட்சி ஆசனத்தில் இடம்பிடித்தார்.

பின்னர் மெல்லத் தொடங்கிய பொருளாதார வளர்ச்சி அசுர வேகத்தில் வளர்ச்சியடையத் தொடங்கியது. சரி அந்த வரலாறு முடிந்துவிட்டது என்று கூறவும் முடியாது.

அதைத் தொட்டே இன்றைய பொருளாதாரத்தை நகர்த்த வேண்டும் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மீண்டெழ முடியாத நிலைக்கு கொண்டு சென்று விட்டுள்ளார் நாட்டின் தலைவர் கோட்டாபய ராஜபக்ச.

மறைக்க முடியாத உண்மை என்ன வென்றால் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் கூட விலையேற்றம் இருந்த போதிலும் மக்கள் வரிசைக்கு நிற்கவில்லை என்பதை மக்கள் நன்கு அறிவர். ஆனால் சில வக்குரோத்துத் தனமான போக்கினால் ஆட்சியை இழந்து மக்களின் செல்வாக்கினை இழந்தார் அன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

தனது சாணக்கியத்தனமான மூளையைப் பயன்படுத்திய ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மைத்திரிபால சிறிசேனவை நாட்டின் ஜனாதிபதியாக்கினார். சிறிது காலம் நகர்ந்த நல்லாட்சி யார் கண் பட்டதோ தெரியவில்லை துயரங்கள் மேல் துயரங்கள் வந்து சேரவே ரணில்–மைத்திரி ஆட்சி மக்கள் செல்வாக்கு சரியத் தொடங்கவே குறிக்கிட்ட சில விசமிகள் நாட்டில் அப்பாவி பொது மக்களை இலக்கு வைத்து ஈஸ்டர் தாக்குல் நடத்தி ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்தனர்.

அந்த நிலையில் கூட சற்று தளம்பலைச் சந்தித்ததே தவிர பொருளாதாரம் வீழ்ச்சியடையவில்லை, மக்கள் வரிசை கட்டி வீதிகளில் நிற்கவில்லை

அதன் பின்னர் தேர்தலை நோக்கி நகர்ந்த நாடு துரதிஷ்டவசமாக பாரிய தொரு ஆட்சி மாற்றத்தை சந்தித்து.

மகிந்த ராஜபக்ச கங்கணம் கட்டியது போல சகோதரனான நந்தசேன கோட்டாபய ராஜபக்சவை களமிறக்கி வெற்றி கண்டார். தேர்தலில்மாத்திரமே வெற்றி கண்ட நந்தசேன பல விடயங்களில் கோட்டைவிட்டுள்ளார்.

தனது தொழில் இராணுவம் தான் என்பதை நாடு முழுவது விதைக்க முற்பட்டாரே தவிர நாட்டு மக்களை காப்பற்ற மறந்துவிட்டார். தனது கடமையை மறந்த நந்தசேன வாக்களித்த 69 இலட்சம் மக்களுக்கும் பசி, பஞ்சம், பட்டினி மற்றும் மரணங்களை கொடுத்தார் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார் கொடுப்பார்.

அடுத்து நடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது மகிந்தவை பிரதமராக்கி ஒரு ஓரமாக வைத்துவிட்டார்களே தவிர எந்தப் பயனும் பெறவவில்லை இந்த நந்தசேன அரசாங்கம். எதற்கு எடுத்தாலும் இராணுவம் இராணுவம் தான். இவர்கள் தான் நாட்டின பொருளாதாரத்தை முன்னேற்றப்போறார்களா? என்ற கேள்வி கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவி வருகின்றது.

சீனா மீது அதீத மோகம் கொண்ட ராஜபக்சர்கள் இலங்கையை ஆங்காங்கே தாரைவார்க்க ஆரம்பித்துவிட்டனர். வெளிநாட்டு முதலீடுகள் மூலமாக நாட்டிற்கு அந்நியசெலாவணி வரும் என்பது உண்மைதான். ஆனால் மேற்கத்திய நாடுகளை நம்பி முதலீடு செய்தமை ராஜபக்சர்களின் முட்டாள் தனம்தான் என கூறுவதை விட வேறு எதனை சொல்ல முடியும்.

வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் டொலரில்தான் இடம்பெறும் என்பதையே ராஜபக்சர்கள் மறந்தார்காளா?.

இன்று நாடு சொல்ல முடியாத அளவிற்கு யாருமே எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு பொருளாதாரத்தில் அடி வாங்கிவிட்டது.

ஒரு பொறுப்பற்ற அரசாங்கமாகவே காணப்படுகின்றது. அரசிக்குப் பதிலாக மரவள்ளிக் கிழங்கை சாப்பிடுங்கள் என கூறும் அளவுக்கு சென்றுள்ளது.

நாளுக்கு நாள் விலையேற்றம், அத்தியாவசிப் பொருட்கள் இல்லை. உரம் இல்லை, அரிசி இல்லை, மா இல்லை, காஸ் இல்லை, மருந்து இல்லை, எரிபொருட்கள் இல்லை, மின்சாரம் இல்லை, வாகனங்கள் இல்லை, நல்ல ஆட்சியாளன் இல்லை என்ற நிலையில் இலங்கை சென்றுவிட்டது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் கூட கையேந்தி கடன் வாங்குகின்றது. ஆனால் அரசாங்கம் ஒன்றை மட்டும் நன்றாகவே செய்கின்றது எதற்கு எடுத்தாலும் வர்த்தமானி அதிலும் வெளியிட்ட வர்த்தமானியை ரத்து செய்வதில் பலேகில்லாடிகள்.

சரி இவ்வாறு வங்கரோத்து அரசியலுக்கு முடிவுகட்டும் நோக்கில் தற்போது ஐக்கிய மக்கள் சக்தி உள்ளடங்கலான எதிரணிகளும் தொழிற் சங்க அமைப்புக்களும் களமிறங்கியுள்ளன. ஆனால் அரசாங்கமோ "தலையிடிக்கு தலையணை மாத்துவதைப்" போலவே செயற்படுகின்றது.

இதனை எல்லாம் விடுத்து அரசாங்கத்தினை நம்பி வாக்களித்த மக்கள் வசதியாக வாழாவிட்டாலும் மூன்று வேளையாவது சாப்பிட்டு நிம்மதியாக வாழவேண்டிய சூழல்நிலையினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே நாட்டு மக்களின் அவாவாக காணப்படுப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரையில் சீனாவில் தொங்கிக் கொண்டு இருப்பதை விடுத்து அதிலிருந்து விடுபட்டு பல்தேசிய ஏற்றுமதிக்கு வழிவகுக்க வேண்டும். இதன் காரணமாக டொலர் தட்டுப்பாட்டை ஒரளவு குறைத்துக் கொள்ள முடியும். சுற்றுலாப்பயணிகள் வருகை கடந்த மூன்று மாதங்களில் அதிகரித்துள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சின் அறிக்கை வெளியிட்டுள்ளது.

கொரோனா என்பதை காரணம் காட்டாது இனிவரும் கால கட்டங்களில் பொருளாதார முன்னேற்றம் செய்யும் தமது ஆட்சிமுடியும் வரையில் நாட்டு என்பது மக்களின் பிரதான வேண்டுகோளாக அமைந்துள்ளது.